# செயற்சாதனை அறிக்கை
# 2011

## இலங்கை புகையிரதத் திணைக்களம்

## முன் நோக்கு.

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பல்வேறு வகையான போக்குவரத்து சாதனங்களிற்கு மத்தியில் நிதிச் சுயாதீனத்துடன் கூடியதுமான பயன்மிக்க புகையிரதப் போக்குவரத்து சேவையொன்றை வழங்கள்.

## சேவைகள்

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பாதுகாப்பானதும் நம்பகரமானதும் குறிப்பிட்டுள்ள காலத்தில் சேவையில் ஈடுபடக் கூடிய கட்டமைப்பினையும் செயற்திறமை மிக்க புகையிரதப் போக்குவரத்து சேவை ஒன்றையும் வழங்குவோம்.

## உள்ளடக்கம்


01. நோக்கமும் பின்னணியும் ........ 1

02. நிறைவேற்றுச் சுருக்கம் ........ 3

03 முழு விபரணம் ........ 5

3.1 செயற்சாதனை காட்டி ........ 7

04. நிதி மற்றும் பௌதீக வளர்ச்சி ........ 7

05. இயக்கவலுவை வழங்கள் மற்றும் புகையிரத அணி ........ 12

5.1 இயக்கவலு அடிப்படை வசதிகள் ........ 13

5.2 சாதாரன தினசரி இயக்கவலு வழங்கள் ........ 14

5.3 எரிபொருள் பாவனை ........ 14

06. நிரந்தர பாதை கட்டமைப்பு மற்றும் கட்டிடங்கள் ........ 15

07. சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பு ........ 18

08. இயக்கப் பாட்டு செயல் திறன் ........ 19

09 நிதிச் செயற்றிறன் ........ 23

9.1 நிதிப் பங்களிப்பு (ரூ.மி.) ........ 24

9.2 புகையிரத வருமானம் (ரூ.மி.) ........ 24

9.3 பயணிகள் போக்குவரத்து ........ 24

9.4 பொருட்கள் போக்குவரத்து ........ 25

10. மனித வளம் ........ 26

11. இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவகம் ........ 27

12. புகையிரத பாதுகாப்புப் படை ........ 27

13. பயணிகள் வசதிகள் ........ 28

14. வினைத்திறன் மற்றும் பெறுபேற்று முன்னறிக்கையை விருத்தி செய்வதற்காக மேற்கொண்ட படிமுறைகள் ........ 29

14.1 அடிப்படை வசதிகள் ........ 29

14.2 இயக்குதல் ........ 29

15. சவால்களும் சிக்கல்களும் ........ 29

16. தற்போது நடைமுறையில் உள்ள பாரிய திட்டங்கள் ........ 30

## 01. குறிக்கோள்கள்

- புகையிரதப் பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்குறிய பிரிவுகளின் பங்களிப்பை விருத்தி செய்தல்.
- புகையிரத இயக்கப்பாடுகளில் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- பிரயாணிகள் புகையிரத சேவைகளின் பயன்களினை மேலோங்கச் செய்தல்.
- முகாமைத்துவக் காரியத் திறமையை அபிவிருத்தி செய்தல்.
- புகையிரத வருமானத்தை அதிகரித்தல்
- மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.

## பின்னணி:-

2011 ம் ஆண்டிலும் இலங்கை புகையிரத சேவை பயனிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு செயற்திறனானதும், பாதுகாப்பும், சுக சௌகரீகமும், குறித்த நேரத்தில் புகையிரத்தை செயற்படுத்துவதற்காக அதிகூடிய பங்களிப்பை வழங்கி செயற்பட்டுள்ளது. இது கீழ் குறிப்பிடப்படும் பிரதான செயற்சாதனை காட்டியுடன் ஒப்பிடும் போது தெரிய வரும்.

கீழ் காட்டப்படுவது 2011 ம் ஆண்டில் புகையிரதச் சேவையை செயற் திறனாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வழி முறைகள் மற்றும் கொள்கைகளில் சில.

01. தனியார் பிரிவினர்களின் உதவியுடன் புதிய சுகபோக பெட்டிகளை நகரங்களுக்கிடையிலான புகையிரதம் உட்பட மலைநாட்டு புகையிரத சேவைக்காக அறிமுகப்படுத்தியமை.

02. புறநகரங்களுக்காக வலுவேக தொடரூர்திகளை சேர்த்தல்.

03. கரையோர பாதை நவீனமாக்கல் திட்டத்தின் கீழ் புகையிரத முற்றங்கள் சிலவற்றுக்காக புகையிரத மடுவங்களை அபிவிருத்தி செய்தல், இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கள்.

04. சகல நகரங்களுக்கிடையிலான புகையிரதங்களுக்காக கையடக்கத் தொலைபேசி மூலம் ஆசனங்களை முன்னதாகப் பதிவு செய்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டது.

05. ஆதர் சீ கிளாக் தொழினுட்ப நிலையத்துடன் இணைந்து (M9) புகையிரத இயந்திரத்திற்கு GPRS முறையை அறிமுகப்படுத்தியமை.

06. பிரயாணச் சீட்டின்றி பயணம் செய்யும் பயணிகளுக்கான தண்டப் பணத்தை அதிகரித்தல்.

07. புகையிரத நிலையங்களில் பயணிகள் ஆசனங்களை அதிகரித்தல். இளைப்பாறும் அறைகள் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுதிதல்.

08. புகையிரத காணி தொடர்பான குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பித்தலும் மற்றும் நிலுவை குத்தகைகளைத் திரட்டுவதற்காக புதிய வேலைத் திட்டமொன்றை நடை முறைப்படுத்தல்.

09. புதிய புகையிரதப் பாதைகள் அமைப்பதற்காக நடைமுறை சார்ந்த செய்யக்கூடிய கற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

10. நகரங்களுக்கிடையிலான மாற்று அலுவலக புகையிரத எண்ணிக்கையை அதிகரித்ததால் பயணிகள் புகையிரத ஓட்டத்தை அதிகரித்தமை.

கீழ்க் காட்டுவது 2011 ம் ஆண்டின் பிரதான செயற்பாடுகளுக்கான காட்டிகள் சிலவற்றினஅதிகரிப்பை காட்டும் தர அறிக்கை.

| இல | பிரதான செயற்சாதனைக் காட்டி | 2010 | 2011 |
|---|---|---|---|
| 01 | குறித்த நேரத்திற்கு புகையிரத ஓட்டத்தை நடைமுறைப்படுத்தல் | 39,540 | 42,043 |
| 02 | புகையிரதத் தடம் புரழுதல். | 44 | 49 |
| 03 | புகையிரத விபத்து | 287 | 146 |
| 04 | இரத்துச் செய்யபபட்ட புகையிரத சேவை % | 2.7 | 6.16 |
| **05** | **நடைபெற்ற புகையிரத கி.மி.** | 9,056,025 | 9,108,187 |

இவ்வருடத்தில் இந்தியாவிலிரந்து இறக்குமதி செய்யப்பட்ட வலுவேக தொடர்ரூர்திகளை அலுவலக மற்றும் தூர பயன சேவைக்காக பயன்படுத்தப்பட்டது. அதன்படி பயனிகள் வசதிற்காக அலுவலக மற்றும் தூர பயண சேவை புகையிரதங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்தியதுடன் கொழும்பு-பதுலை மற்றும் கொழும்பு-கண்டி வரை நடைபெறும் புகையிரதங்களுக்காக சொகுசான பெட்டிகள் சில சேற்கப்பட்டன. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட புகையிரத நிலையங்கள் நவீனமாக்கப்பட்டு பயனிகள் வசதிகள் மேம்படுத்தப்பட்டதுடன் எதிர் காலத்தில் முறையான வகையில் சகல புகையிரத நிலையங்களையும் நவீனமாக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்து.

மேலும் பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக அழிந்து போன புகையிரத பாதைகளை மீண்டும் அமைக்கும் நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் அந்த சகல திட்டங்களும் 2014 ம் ஆண்டு நடுப்பகுதியளவில் நிறைவு செய்வதற்கு உள்ளது. அத்திட்டங்களின் சுருக்கமான விபரத்தை பின்வருமாறு காட்ட முடியும்.

| இல | திட்டத்தின் பெயர் | தூரம் கி.மீ. | உத்தேசித்த செலவு (அ.டொலர்) |
|---|---|---|---|
| 01. | மதவாச்சி- மடு பாதை வரை புகையிரத பாதையை மீண்டும் அமைத்தல் | 43 | 81.30 |
| 02. | மடு பாதை - தலை மன்னார் வரை புகையிரத பாதையை மீண்டும் அமைத்தல் | 63 | 149.50 |
| 03. | ஓமந்தை - பளை வரை புகையிரத பாதையை மீண்டும் அமைத்தல் | 90 | 185.49 |
| 04. | பளை- காங்கேசன்துறை வரை புகையிரத பாதையை மீண்டும் அமைத்தல் | 56 | 149.34 |
| 05. | அநுராதபுரத்திலுருந்து வடக்கு புகையிரத பாதை யிலும் தலைமன்னார் பாதையிலும் சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பை ஸ்தாபித்தல் | 313 | 86.50 |

 

வடக்கு புகையிரத பாதையை மீண்டும் அமைக்கும் திட்டத்தின் கீழ் இடம்பெறும் புகையிரத பாதை அபிவிருத்தி நடவடிக்கை

மஹிந்த சிந்தனை கொள்கை திட்டத்தினுள் இலங்கை புகையிரத சேவையை அபிவிருத்தி செய்தல் நடைபெறுவதுடன் அதன் உச்ச நோக்கத்தை அடைவதற்காக குறித்த காலத்திற்குள் உச்ச செயற் திறன் மற்றும் பலனுடன் கூடியதாக செயற்பட்டு, பயனிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தின் பிரதான பொறுப்பு இடம்பெறுகிறது.

## 02. நிறைவேற்றுச் சுருக்கம்:-

இலங்கை புகையிரதத் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் அரச திணைக்களமாக தற்போது இயக்க நடவடிக்கைகள் இடம்பெறுகிறது. புகையிரத முகாமையாளர் திணைக்களத்தின் தலைவராக செயற்படுவதுடன் மேலதிக புகையிரத முகாமையாளர் (இயக்கம்), மேலதிக புகையிரத முகாமையாளர் (தொழிநுட்பம்), மேலதிக புகையிரத முகாமையாளர் (நிருவாகம்) என பதில் தினைக்கள தலைவர்கள் மூன்று நபர்களும் மற்றும் துணை திணைக்களத் தலைவர்களின தலைவர்களினதும் பிரிவுத் தலைவர்களினதும் கீழ் இடம் பெறும்.

இத்திணைக்களத்தின் தாபன கட்டமைப்பை கீழ் உள்ளவாறு காட்ட முடியும்.

புகையிரத முகாமையாளர்

| மே. புகையிரத முகாமையாளர் (தொழிநுட்பம்) | மே.புகையிரத முகாமையாளர் (இயக்கம்) | மே. புகையிரத முகாமையாளர் (நிருவாகம்) |
|---|---|---|

**உப தினைக்களம்\அலகுகளின் முதல்வர்**

01. பிரதானமான கணக்காளர்.
02. புகையிரத களஞ்சிய அந்நியட்சகர்.
03. பிரதானமான பொரியியளாளர்(ஓட்ட சக்தி).
04. பிரதான இயந்திரவியல் பொறியியளாளர்.
05. பிரதான ொரியியளாளர் (பாதை,தொழிற்சாலை).
06. பிரதான பொரியியளாளர் (சமிக்கையும் மின் தொடர்பாடலும்).
07. போக்கு வரத்து அத்தியட்சகர்
08. வானிப அத்தியட்சகர்.
09. அத்தியட்சகர் (இலங்கை புகையிரத பாதுகாப்பு படை).
10. பணிப்பாளர் இலங்கை - ஜர்மனி தொழில் நுட்ப பயிற்ச்சி நிலையம்
11. பணிப்பாளர் (திட்டமிடல்)
12. பிரதான வரவு செலவு உத்தியோகத்தர்
13. முகாமையாளர் (தகவல்கள் திரட்டல்)

**உப திணைக்களங்கள் / பிரிவுகள் முதல்வர்கள்**

01. பிரதானமான கணக்காளர்.
02. புகையிரத களஞ்சிய அத்தியட்சகர்.
03. பிரதான பொறியியளாளர் (ஓட்ட சக்தி).
04. பிரதான இயந்திரவியல் பொறியியளாளர்.
05. பிரதான பொறியியளாளர் (பாதைகள் / தொழிற்சாலைகள்).
06. பிரதான பொறியியளாளர் (சைகையும் மின்தொடர்பாடலும்).
07. போக்குவரத்து அத்தியட்சகர்.
08. வனிக அத்தியட்சகர்.
09. அத்தியட்சகர் (புகையிரத பாதுகாப்புப் படை).
10. பணிப்பாளர் (இலங்கை ஜர்மனி தொழில்நுட்பப் பயிற்ச்சி நிலையம்).
11. பணிப்பாளர் (திட்டமிடல்).
12. முகாமையாளர் தகவல்கள் அமைப்பு.
13. பிரதான வரவுசெலவு (தரவுச் சீரிடல்) உத்தியோகத்தர்.

**உப திணைக்களங்கள் / பிரிவுகள்:–**

01. புகையிரத முகாமையாளர் அலுவலகம்
02. கணக்காளர் உப திணைக்களம்
03. புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் உப திணைக்களம்
04. போக்குவரத்து அத்தியட்சகர் உப திணைக்களம்
05. வணிக உப திணைக்களம்
06. பிரதான பொறியியலாளர் (இயக்கவலு) உப திணைக்களம்
07. பிரதான இயந்திரவியல் பொறியியலாளர் உப திணைக்களம்
08. பிரதான பொறியியலாளர் (பாதை மற்றும் வேலை) உப திணைக்களம்
09. பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு) உப திணைக்களம்
10. இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவகம்
11. இலங்கை புகையிரத பாதுகாப்புப் படை
12. பிரதான மொத்த செலவு உத்தியோகத்தர் அலுவலகம்
13. திட்டப் பிரிவு
14. தரவுச் சீரிடல் அலகு

## புகையிரத நிலையங்கள்

| இல | பாதை | புகையிரத நிலைய எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | பிரதான பாதை | 78 |
| 02. | மாத்தளைப் பாதை | 12 |
| 03. | புத்தளம் பாதை | 45 |
| 04. | களணிவெளிப் பாதை | 30 |
| 05. | மட்டக்களப்புப் பாதை | 31 |
| 06. | வடக்குப் பாதை (தற்போது சேவை இல்லை) | 55 |
| 07. | திருகோணமலைப் பாதை | 07 |
| 08. | கரையோரப் பாதை | 69 |
| 09. | தலை மன்னார் பாதை(தற்போதுசேவையில்லை) | 11 |
| 10. | மிஹிந்தலை பாதை | 02 |
| 11. | ஏனையவை | 02 |
| | **மொத்தம்** | **343** |

**புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை**

பிரதான புகையிரத நிலையங்கள - 188

உப புகையிரத நிலையங்கள - 160

**மொத்த எண்ணிக்கை – 343**

## 03. முழு விபரணம்

2011 ம் ஆண்டில் போக்குவரத்துத்துறையினுல் இலங்கை புகையிரத சேவை பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு செயற்திறனான சேவையை வழங்குவதற்காக அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. அதற்காக பயணிகள் மற்றும் ஏனைய சேவை தேவைகளுக்கேற்றபடி திட்டங்களை வகுத்து பல வழிமுறைகளில் கவர்ச்சியானதும் செயற்திறனாதுமான புகையிரத சேவையொன்றை வழங்குவற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. புகையிரத திணைக்களத்தின் சகல உப திணைக்களங்களும் பிரிவுகளும் இப்பணியை வெற்றிகரமாக செய்வதற்காக நேரடி ஒத்துழைப்பை வழங்கியது.

2010 ம் ஆண்டடில் மொத்த வருமானம் ரூ.மி. 4018 ஆனதுடன் 2011 ம் ஆண்டில் மொத்த வருமானம் ரூ.மி. 4235.38 ஆகும். சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் 5% அதிகரிப்பைக் காட்டுகிறது. எப்படியிருந்தும் பொருட்கள் வருமானம் சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் சிறிதளவில் குறைந்து காணப்படுகிறது.

2011 ம் ஆண்டில் புகையிரத சேவையை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ.மி. 8295.22 மீள்வரவாகவும், ரூ.மி. 28719.54 முதலீட்டுச் செலவாக ஏற்க நேர்ந்தது. இதற்கு பிரதானமாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய வலுவேக தொடரூர்திகளை சேவையில் ஈடுபடுத்தியதும் புதிய அலுவலக புகையிரத சேவையை புறநகர் பயணிகள் சேவைக்காக அறிமுகப்படுத்தியமையால் புகையிரதத்தில் பயனம் செய்யும் பயனிகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு பிரதான காரணமாகும். மேலும் கரையோர புகையிரத பாதை நவீனமாக்குவதற்காக மூடப்பட்டிருந்தும் வருமானத்தில் அதிகரிப்பைக் காட்டியது மிகவும் முக்கிய ஏற்பாடுநிலையென தெரியவருகிறது. இது சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பைக் காட்டுகிறது. இச்செலவினுள் புகையிரத பாதை, பாலம், புகையிரத நிலையப் பராமரிப்பு, புகையிரத அணிப் பராமரிப்பு, சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல் போன்ற பிரதான பகுதிகளுக்காக பிரதான மீள்வரவும் முதலீட்டுச் செலவும் உள்ளடங்கும்.

2011 ம் ஆண்டில் புகையிரத பயணிகள் எண்ணிக்கை மில்லியன் 103.1 ஆனதுடன் பயணிகள் தூரம் கி.மி. 4526.9 ஆகும். மேலும் பொருட்கள் மெற்றிக்தொன் 2.9 ஐ போக்குவரத்து செய்ததுடன் டொ.கி.மி. 175.7 ஆகும்.



தெற்கு புகையிரத பாதையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் அமையும் புகையிரத பாதை.

இந்தியாவின் கடனுதவித்திட்டத்தின் கீழ் கொழும்பிலிருந்து மாத்தறை வரையுமான புகையிரதப் பாதையை நவீனமயப்படுத்தும் செயல் நடைபெறுகின்றது. அதன் கீழ் காலியிலிருந்து மாத்தறை வரையுமான 42 கி.மீ நவீனமயமாக்கப்பட்டு புகையிரதச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் காலியிலிருந்து களுத்துறை தெற்கு வரையிலான பகுதியில் நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன. இந்த நவீனமயப்படுத்தலின் பின் மணிக்கு 100 கி.மீ என்ற வேகத்தில் பயணம் செய்ய முடியுமாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் தெமட்டகொடை,அளுத்கம மற்றும் காலியில் புகையிரத மடுவங்கள் அமைக்கப்படுகின்றது. அளுத்கம புகையிரத மடுவத்துக்குத் தேவையான அலுவலக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாத்தறை-கதிர்காமம் புகையிரதப் பாதையின் முதல் கட்டமான

மாத்தறையில் இருந்து பெலியத்த வரையிலான நிர்மாண பணிகளின் ஆரம்ப செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன் அதற்கான உதவிகள் சீன அரசினால் வழங்கப்பட்டது.





**தெற்கு புகையிரத பாதை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் அமையும் புகையிரத மடுவம்.**

மேலும் வடக்கு புகையிரத பாதையை மீண்டும் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இந்திய கடனுதவியின் கீழ் நிறுவப்படும் இச்செயற்திட்டத்தின் கீழ் வட பாதை மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையும் ஓமந்தையிலிருந்து காங்கேசன்துறை வரைக்கும் மீண்டும் அமைக்கப்படும்.

சமிக்கைக் கட்டமைப்பை பராமரிக்கும் நடவடிக்கைகள் 2011 ம் ஆண்டிலும் செயற்திறனாதாக செயற்படுத்தியதுடன் ஜாஎலயிலிருந்து சீதுவ வரை புதிய சமிக்கை கட்டமைப்பொன்று நிறுவப்பட்டது. சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் 2011 ம் ஆண்டில் சமிக்கை கோளாறுகளின் எண்ணிக்கையை குறைக்க முடிந்தது.

புகையிரத பாதுகாப்புப் படையின் சுற்றிவளைப்பு பணிகள் தொடராக நடைபெற்றதுடன் அதிக தண்டப்பணம் மூலம் வருமானம் பெறப்பட்டது. மேலும் சட்ட விரோத குடியிருப்பாளர்களை அகற்றுதல், புகையிரத காணிகளின் வருமானத்தை சேகரித்தல் போன்ற பணிகள் தொடராக இடம் பெற்றன.

இந்திய கடனுதவியின் கீழ் வலுவேக தொடரூர்திகள் 20 ல் 2011 ம் ஆண்டு முடிவடைவதற்குள் வலுவேக தொடரூர்திகள் 15 கொண்டுவரப்பட்டது. இது செயற்திறனான புகையிரத சேவையை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு உதவியாக இருந்தது. இந்த வலுவேக தொடரூர்திகள் புதிய அலுவலக புகையித சேவைகள் பலவற்றுக்காகவும் புறநகர் சேவைக்காகவும் பயன்படுத்தப்பட்டது. எரிபொருள் செலவு அதிகரித்தமை, கேள்விப்பத்திரம் கோரல் நடவடிக்கை களிலுள்ள தாமதங்கள், நிருவாக செயற்திறன் மற்றும் நிதிச் சிக்கல்கள் போன்ற சவால்களுக்கும் சிக்கல்களுக்கும் மத்தியிலும் 2011 ம் ஆண்டில் திருப்தியான மட்டத்தில் செயற்சாதனையை கைப்பற்றக்கூடியதாக இருந்தது. உயர்ந்து செல்லும் பயணிகள் வேண்டுகோள்களுக்கும், புகையிரதத்தை நோக்கி கவரப்படும் பயணிகளின் எண்ணிக்கையில் முன்னேற்றத்தை காட்டுவதுடன் அதற்காக கரையோர புகையிரத பாதையை நவீனமயப்படுத்தல், விரைவாகவும் கால நேரத்திற்கு வர முடிந்தமை, அலுவலக புகையிர சேவைகளை அதிகரித்தல், வழங்கீடுகளில் பேரூந்து கட்டணம் அதிகரித்தல் போன்ற காரணிகள் முக்கியமானவை. ஏதிர்காலத்தில் புதிதாக கொண்டு வரப்படும் இந்திய வலுவேக தொடரூர்திகள் மற்றும் 2012 ம் ஆண்டில் சீனாவலிருந்து இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்ட்டுள்ள புதிய வலுவேக தொடரூர்திகளை சேவையில் ஈடுபடுத்துவதனூடாக அதிக பயணிகள் மற்றும் அவர்களுக்கு சுகபோக சேவையை வழங்க முடியுமானதுடன் வருமான மட்டமும் அதிகரிக்கும்.

3.1 செயற்சாதனை காட்டி

| இல | செயற்சாதனைக் காட்டி | 2010 | 2011 |
|---|---|---|---|
| 01 | புகையிரத அணி(சேவைக்காகவுள்ள) | | |
| | 2.1 இயந்திரம் | 89 | 56 |
| | 2.2 வலுவேக தொடரூர்திகள் | 42 | 52 |
| | 2.3 பெட்டிகள் | 525 | 525 |
| | 2.4 சரக்குப்பெட்டி | 722 | 722 |
| 02 | புகையிரத அணி(வளமான சேவையை இடம்பெற செய்வதற்காக) | | |
| | 3.1 இயந்திரம் | 110 | 110 |
| | 3.2 வலுவேக தொடரூர்திகள் | 60 | 60 |
| | 3.3 பெட்டிகள் | 800 | 800 |
| | 3.4 சரக்குப்பெட்டிகள் | 1,200 | 1,200 |
| 03 | புகையிரத இயக்கம் | | |
| | 4.1 பயணிகள் எண்ணிக்கை (மி) | 101.5 | 103.1 |
| | 4.2 பொருட்கள் (மெ.டொ.) | 2.7 | 2.9 |
| 04 | புகையிரத இயக்கம் (கி.மி.மில்லியன்) | | |
| | 5.1 பயணிகள் | 4,352.8 | 4,526.9 |
| | 5.2 பொருட்கள் | 162.8 | 175.7 |
| | 5.3 புகையிரதம் | 9.7 | 10.04 |
| 05 | மொத்த வரமானம் (ரூ.மி) | 4,018 | 4,235.38 |
| | 6.1 பயணிகள் | 3,112.6 | 3,239.54 |
| | 6.2 பொருட்கள் | 419.8 | 398.11 |
| | 6.3 ஏனயவை | 485.6 | 597.72 |
| 06 | மொத்தச் செலவு(ரூ.மி.) | 18,850.7 | 37,014.76 |
| | 7.1 மீள்வரவுச் செலவு | 7,810.75 | 8,295.22 |
| | 7.1.1 ஊதியங்கள் | 5,144 | 3,172.76 |
| | 7.1.2 பராமரிப்பு | 2,047.4 | 2,047.4 |
| | 7.2 முதலீட்டுச் செலவு | 11,362.78 | 28,719.54 |
| 07 | எரிபொருள் பாவனை (டீசல் லீ.மி) | 29.37 | 30.48 |
| | எரிபொருள் மொத்தச் செலவு (ரூ.மி) | 2,144 | 2,560.24 |
| 08 | 9.1 மொத்த தொழிலாளர் எண்ணிக்கை | 15,603 | 17,360 |

## 04. நிதி மற்றும் பௌதீக வளர்ச்சி

**நிதி வளர்ச்சி –2011**

| இல | செலவு | ஒதுக்கீடு (ரூ.மி.) | உரிய செலவு (ரூ.மி.) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| 01 | மீள்வரவுச் செலவு | 8,473.72 | 8,295.22 | 97.89 |
| 02 | முதலீட்டுச் செலவு | 28,977.93 | 28,719.54 | 99.11 |
| **மொத்த வருமானம்** | | **37,451.65** | **37,014.76** | **98.5** |

**வருட செலவு 2007−2011**




| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| மீழ்வரவு (ரூ.மி) | 7,296.7 | 8,224.6 | 8,787.6 | 7,191.4 | 8,295.22 |
| முதலீட்டுச்செலவு (ரூ.மி) | 6,056.9 | 1,0276.9 | 10,173.1 | 12,164.2 | 28,719.54 |

**உப திணைக்களங்களில் நிதி வளர்ச்சி−2011**

| | உப திணைக்களம் | ஒதுக்கப்பட்ட நிதி(ரூ.மி.) | | செலவு(ரூ.மி.) | | இலக்கை புர்த்தி செய்த விகிதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீழ்வரவு | முதலீடு | மீழ்வரவு | முதலீடு | மீழ்வரவு | முதலீடு |
| 1. | புகையிரத முகாமையாளர் அலுவலகம்(பொ.மு,பி. கணக்.) | 434.69 | 8.6 | 411.39 | 7.97 | 94.64 | 92.67 |
| 2. | இலங்கை ஜேர்மன் தொழி னுட்ப பயிற்சி நிறுவகம் | 16.26 | 6..5 | 16.15 | 4..38 | 99.9 | 67.38 |
| 3. | இயக்கவலு | 3,024.98 | 424.02 | 3,015.85 | 423.44 | 100 | 99.86 |
| 4. | போக்குவரத்து அத்தியட்சகர் | 1,979.69 | 0.5 | 1,915.89 | 0.37 | 96.77 | 74 |
| 5. | வணிக அத்தியட்சகர் | 27.64 | 2.5 | 24.64 | 1.38 | 89.15 | 55.2 |
| 6. | பாதுகாப்புப் பிரிவு | 263.05 | 0.55 | 260.77 | 0.53 | 99.13 | 96.36 |
| 7. | பிரதான இயந்திர பொறியிய. | 878.39 | 4,709.38 | 878.38 | 4,699.86 | 99.9 | 99.78 |
| 8. | புாதை மற்றும் தொழிற்சாலை | 1,626.98 | 23,465.52 | 1,553.37 | 23,222.17 | 95.48 | 98.96 |
| 9. | சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு | 222.04 | 360.32 | 218.78 | 395.44 | 98.53 | 99.75 |
| | **மொத்தத்தொகை** | **8.473.72** | **28.977.93** | **8.295.22** | **28.719.54** | **84.53** | **99.11** |

**மீண்டெழும் செலவு**

**இலங்கை புகையிரதச் சேவை**

| | செலவுச் | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மி.) | உண்மைச் செலவு (ரூ.மி.) | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| 1. | தனிநபர் ஊதியங்கள் | 5,572.88 | 5,427.94 | 97.39 |
| 2. | பிரயாணச் செலவு | 289.72 | 278.85 | 96.25 |
| 3. | வழங்கள் | 2,151.93 | 2,146.69 | 99.75 |
| 4. | பராமரிப்புச் செலவு | 69.45 | 64.19 | 92.77 |
| 5. | உடன்படிக்கை செய்த சேவை | 338.31 | 327.6 | 96.83 |
| 6. | ஏனைய செலவு | 51.34 | 49.8 | 97.0 |
| **மொத்தத்தொகை** | | **8.473.63** | **8.295.07** | **97.89** |

**நிதி மற்றும் பௌதீக வளர்ச்சி –2011**

**(2011 வரவு செலவு ஒதுக்கீடுப்படி)**

**இலங்கை புகையிரத சேவை**

**முதலீட்டுச் செலவு**

| திட்டம் | நிகழ்வு/ செயற்டபாடு | நிதியோதிக்கீடு | | | பௌதீக வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|
| | | நிதி இலக்கு (ரூ.மி.) | உண்மையான செலவு | வளர்ச்சி % | |
| 1 | **சாதாரண நிருவாகம்** | **9.20** | **8.49** | **100** | **100** |
| 2 | அலுவலக உபகரணம் மற்றும் மர தளபாடங்கள் கொள்வனவு | 4.12 | 4.12 | | |
| 3 | புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம் | 1.9 | 1.9 | | |
| 4 | பிரதான கணக்காளர் அலுவலகம் | 1.4 | 1.4 | | |
| | களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம் | 1.49 | 1.49 | | |
| | ஆசணம் ஒதுக்கிக் கொள்ளும் முறை பயணச்சீட்டு வழங்கும் முறை | 0.08 | 0.08 | 100 | 100 |
| | தகவல் தொழிநுட்பத்தை புகையிரதங்களுக்கு அறிமுகப்படுத்தல் | 3.05 | 0.75 | 25 | 25 |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி பாதுகாப்பு பரிவு | 0.70 | 0.70 | 100 | 30 |
| | அலுவல உபகரணங்கள் மற்றும் மர தளபாடங்கள் கொள்வனவு | 0.25 | 0.25 | | |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி (இலங்கை புகையிரதச் தொழில் நுட்ப பயிற்சி நிலையம்) | 0.30 | 0.28 | | |
| 1 | **பயிர்ச்சியும் அபிவிருத்திகளும் இலங்கை ஜேர்மன் புகையிரத தொழி நுட்ப பயிற்சி நிலையம்** | 0.30 | 0.28 | | |
| 2 | இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 0.25 | 0.25 | | |
| | இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 6.00 | 3.94 | | |
| 3 | **போக்குவரத்து** | 0.50 | 0.37 | 74 | 40 |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 0.50 | 0.37 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **வணிகச் செயற்பாடுகள்** | 2.50 | 1.34 | 54 | 48 |
| | அலுவலக உபகரணங்கள் மற்றும் மர தளபாடங்கள் கொள்வனவு செய்தல் | 2.00 | 1.14 | | |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 0.50 | 0.24 | | |
| 4 | **சிறிய திருத்தங்கள்** | 424.2 | 423.44 | 99 | 100 |
| | இயந்திரம், சரக்குப் பெட்டிகளில் சிறிய திருத்தங் களுக்காக உதிரிப்பாகங்கள் | 120.76 | 120.76<br>20.94 | 100 | 100 |
| | இயந்திர மடுவங்களை மேம்படுத்தல் | 20.94 | 0.14 | 100 | 100 |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 0.25 | | 56 | 45 |
| | **பிரதான திருத்தங்கள்** | 3252.87 | 3243.64 | 99 | 100 |
| | இயந்திரம், சரக்குப்பெட்டிகளில் சிறிய திருத்தங்களுக்காக உதிரிப்பாகங்கள் | 1064.06 | 1064.06 | 100 | 90 |
| | பெட்டிகளைத் திருத்துதல் | 41.99 | 41.99 | | |
| | இயந்திர உதிரிப்பாகங்கள் கொள்வனவு | 109.15 | 109.15 | | |
| | புகையிரத பெட்டிகளை திருத்தும் திட்டம் | 0.08 | 0.15 | 10 | 12 |
| | புாகிஸ்தானிலிருந்து எரிபொருள் டாங்கி -24 கொள்வனவு செய்தல் | 158.95 | 158.91 | 100 | 100 |
| | **கொள்வனவு செய்தல்** | | | | |
| | இந்தியாவிலிருந்து 20 வலுவேக தொடரூர்திகளை கொள்வனவு செய்தல் | 3.30 | 3.28 | | |
| | “மேலேயுள்ள விடயம்” | 3074.53 | 3074.53 | 100 | 100 |
| | சீனாவிலிருந்து 13 வலுவேக தொடரூதிகளை கொளடவனவு செய்தல் | 6.09<br>10.00 | 6.06<br>0.85 | 86 | 10 |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 0.25 | 0.21 | 2 | 8 |
| 04 | **பாதை மற்றும் தொழிற்சாலை பராமரிப்பு** | 23268.46 | 23035.93 | 99 | 100 |
| | கட்டடங்களும் நிர்மானப்பணிகளும் | 109.58 | 109.58 | 100 | 100 |
| | கட்டட நிர்மானம் சமிக்கை தொ. தெடர்பு | 3.89 | 3.89 | 100 | 50 |
| | சமிக்கை தொ.தொடர்பு திணைக்கள தொழிற்சாலை, அலுவலக நிர்மானம் | 2.43 | 2.43 | 100 | 100 |
| | பி.இ.பொறி. உப திணைக்கள தொழிற். அடிப்படைத் தேவை, முற்ற அபிவிரு. | 0.26 | 0.26 | 100 | 100 |
| | தொழிற்சாலை கூரை, பீலி | 0.001 | | | |
| | தொழிற்சாலை வடிகாலமைப்பு | 27.36 | 27.36 | 100 | 30 |
| | மோட்டார் வாகன கொள்வனவு | | 0.55 | | |
| | டேம்பிக் இயந்திர கொள்வனவு | 2.64 | | 90 | |
| | அலுவலக உபகரன கொள்வனவு | 0.65 | | | |
| | உருக்கு பாலம் | 50 | 41.93 | | |
| | பெல்ஜியம் பாலம் செயற்திட்டம் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிலையான பாதை பராமரிப்பு | 2232.03 | 2232.03 | 100 | 100 |
| | கொங்கிறீட் உற்பத்தி சாலை | 192.49 | 192.49 | 100 | 100 |
| | றாகம-புத்தளம் புகையிரத பாதை | 30.28 | 30.28 | 100 | 100 |
| | களனிவெலி புகையிரத பாதை | 19.33 | 19.33 | 100 | 100 |
| | வடக்கு புகையிரத பாதை மேம்படுத்தல் (தாண்டிக்குளம்-ஓமந்தை) | 58.76 | 58.76 | 100 | 100 |
| | களுத்துறை வடக்கலிருந்து பயாகல வரை இருவழி புகையிரதப் பாதை அமைத்தல் | 1.48 | 1.48 | 100 | 100 |
| | புகையிரத நிலையங்களை மேம்படுத்தல் வீதிகளுக்கு குறுக்காக உள்ள | 43.92 | 43.92 | 100 | 100 |
| | புகையிரதப் பாதைகளை மேம்படுத்தல் | 3.92 | | | |
| | ஒறுகொடவத்த களனிக்கிடையில் மூன்றாவது பாதை அமைத்தல் | 1.88 | 3.92 1.87 | 100<br>99.2 | 75<br>60 |
| | இந்திய கடனுதவியின் கீழ் கரையோர புகையிரதப் பாதையை நவீனமயப் படுத்தல | 4645.62<br>306.66 | 4645.62<br>306.66 | 100<br>100 | 100<br>100 |
| | ‘‘மேலேயுள்ள விடயம்’’ | | | | |
| | கிழக்குப் புகையிரதப் பாதையை நவீனமயப்படுத்தல் | 50<br>1309.96 | 41.24<br>1309.96 | 90 | 90 |
| | ‘‘மேலேயுள்ள விடயம்’’ | | | 100 | 100 |
| | ஓமந்தை பளை புகையிரத பாதை மீளமைப்பு | 529395 | 5290.92 | 99.9 | 85 |
| | ‘‘மேலேயுள்ள விடயம்’’ | 77.63 | 2.46 | | |
| | மதவாச்சி - மடு வரை புகையிரதப்பாதை மீள்நிர்மானம் | 3162.44 | 3162.42 | 100 | 75 |
| | ‘‘மேலேயுள்ள விடயம்’’ | 100 | 5.42 | | |
| | மடு தலைமன்னார் வரை புகையிரதப் பாதை மீள்நிர்மாணம் | 5385.98 | 5385.98 | 100 | |
| | ‘‘மேலேயுள்ள விடயம்’’ | 50 | 0.23 | | |
| | பளையிலிருந்து காங்கேசந்துறை வரை | 1.18 | | | |
| 04 | சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு | 360.32 | 359.44 | 99.3 | 100 |
| | சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு முறை பராமரிப்பு | 133.49 | 133.49 | 100 | 100 |
| | அலுவலக உபகரண கொள்வளவு | 0.65 | 0.65 | 100 | 100 |
| | மரதான கோட்டை இடையில் 4 வது பாதைக்கும் ஒறுகொடவத்த களணிக் கிடையில் 3 வது பாதைக்கு சமிக்கை முறையை அமைத்தல் | 0.76 | 0.76 | 100 | 100 |
| | மரதான வாத்துவக்கிடையில் ஒருமுகப்படுத்திய சமிக்கை முறையை அறிமுகப்படுத்தல் | 141.32 | 141.32 | 100 | 70 |
| | ஜாஎல சீதுவ இடையில் இரு வழி பாதை சமிக்கை அமைத்தல் | 1.87 | 1.87 | 98 | 100 |
| | வடக்கு புகையிரத பாதைக்கு சமிக்கை அமைத்தல் | 1 | 0.39 | 30 | 10 |
| | பாதுகாப்பான புகையிரத குறுக்கு பாதை அமைத்தல் (தன்னியக்க) | 16.33 | 16.33 | 100 | 100 |
| | மின் கலத்தினை தாங்கும் நிறுத்தியை அமைத்தல் | 6.27 | 6.27 | 100 | 100 |
| | பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 0.25 | | | |

## 05. இயக்கவலு வழங்கள் மற்றும் புகையிரத அணி

செயற்திறன் மற்றும் சௌகரீகமான பயனிகள் போக்குவரத்தை வழங்கும் நோக்குடன் புகையிரத வலுவேக தொடரூர்திகள், பயணிகள் பெட்டிகள், புகையிரத இயந்திரங்களில் புனரமைப்பு செயற்பாடு மற்றும் அலுவலக ஆளணியை விருத்தி செய்வதற்காக கீழ் குறிக்கப்படும் பிரிவுகளை புதிதாக நிறைவு செய்தல், நவீனமயமாக்கல் மற்றும் திருத்தியமைத்தல் செய்யப்பட்டது.

01. மாளிகாவத்தை முற்றம்

1.1 இந்த வலுவேக மடுவ முற்றத்தை புதிய செயற்றிட்ட தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை சேர்த்து புதிதாக அமைக்கப்பட்டது. 1.2 பயணிகள் பெட்டிகளை பரிசோதிற்பதற்காக தரைக்கு கீழ் அறையமைத்தல்.

1..3 நீர் வழிந்து செல்வதற்காக வடிகாலமைபில் 60% வேலையை முடித்தல்

02. தெமடகொட இயந்திர மடுவம்

2.1 தெமடகொட இயந்திர மடுவத்தின் நிர்மானப்பணிகளில் 75 % அளவில நிறைவடைந்துள்ளது.

2.2 இயந்திரங்களை உயர்த்துவதற்காக ஓரிடத்தை அமைத்து புதிதாக Lifting jac I கொள்வனவு செய்து பொருத்துதல.

03. கொழும்பு இயந்திர மடுவத்தை திருத்தியமைத்தல் மற்றும் வடிகாலமைப்பை திருத்தியமைத்தல்

மின்வலுவேக தொடரூர்திகள் இயந்திர மடுவத்தை (PCS) திருத்தியமைத்தல் நடவடிக்கைகளில் 75 % அளவில் நிறைவு செய்தல் மற்றும் நீர் மின் இயந்திர மடுவ (HLS) உணவுச்சாலை திருத்தியமைத்தல் பணிகளை நிறைவு செய்தல்.

04. மாவட்ட இயக்கவலு பரிசோதகர் உத்தியோக அறையை திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்தமை மற்றும் பிரதான இயக்கவலு பொறியியலாளர் அலுவலகத்தின் திருத்த வேலைகள் நிறைவடைதல்.

## புகையிரத அணி

நாளாந்தம் புகையிரத சேவையை நடத்துவதற்காக பிரதானமாக பயன்படுத்தப்படும் இயந்திர குழுவாகிய டீசல் மின் இயந்திர எண்ணிக்கை நாளொன்றுக்கு வழங்கப்படும் சாதாரண எண்ணிக்கை 58 க்கும் 60 க்கும் இடையிலாகும். இந்த நிலமையை மேம்படுத்துவதற்காக புகையரத இயந்திரங்களை திருத்தும் போது தொழிற்சாலை மற்றும் இயந்திர மடுவங்களில் கழியும் நேரச்சக்கரத்தை மேலும் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வேலை அட்டவணைகள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.




2011 ம் ஆண்டில் ஓட்டத்தில் இணைக்கப்பட்ட S11 வகை வலுவேக தொடரூர்தி.

புதிய வலுவேக தொடரூர்திகள் (S11) 15 ஐ அறிமுகப் படுத்தியதன் மூலம் கொழும்பு புறநகர் சேவையை வலுப்படுத்த முடிந்தது. இங்குபின்பற்றிய தந்திரோபாயம் புறநகர்

சேவைப்புகையிரதங்களில் பயனிகள் கொள்ளளவை அதிகரித்தமை. இதற்காக நெருக்கடியான நேரங்களில் இரட்டை வலுவேகத் தொடரூர்திகள் பயன்படுத்தப்பட்டது.

**5.1 இயக்கவலு அடிப்படை வசதிகள்**

ரூ.மி. 120 செலவில் கொழும்பு இயந்திர மடுவத்தை மேம்படுத்தும் செயற் திட்டத்தின் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள வளர்ச்சி பெறப்பட்டுள்ளது.

1 மாளிகாவத்தை முற்றம்

தொழிற்சாலையையும் பயணிகள் பெட்டிகளையும் சுத்தம் செய்யும் கட்டமைப்பை நவீனமயப்படுத்தி, தூக்கும் இயந்திரம் (Hoist) ஐ பொருத்துதல், நீர் வழிந்தோட முறையான வடிகாலமைப்பை பழுதுபார்த்தல்.

2 இயந்திர மடுவம்- தெமடகொட சகல கழிவகற்றல்களை அகற்றி டர்ன் டேபல் ஐ மீண்டும் நடைமுறைப்படுத்தல

3. கொழும்பு முற்றம்

கொழும்பு முற்றத்தில் தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல், சண்டின் சாரதிகளுக்காக இளைப்பாறும் அறைகளை அமைத்துக் கொடுத்தல்

4 வலுவேக இயந்திர மடுவம்-மாளிகாவத்தை

புதிய தொழிற்சாலையை அமைத்தல்

5 மின்வலுவேக இயந்திர மடுவம்

இயந்திர மடுவ கட்டிடத்தை புதிதாக இணைத்தலும் அங்கு ஊளியர்களுக்காக இளைப்பாறும் அறை வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.

மேலும் கரையோர புகையிரத பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் மாளிகாவத்தை, அளுத்கம மற்றும் காலி போன்ற நிலையங்களில் இயந்திர மடுவங்களை நிர்மானிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டது.

2010 ம் ஆண்டினுல் இயந்திரங்கள் செயலிழந்த எண்ணிக்கை 593 ஆனதுடன் 2011 ம் ஆண்டினுல் அது 575 வரை குறைவைக் காட்டுகிறது. 2010 ம் அண்டினுல் செயற்பட்ட இயந்திர கிலோ மீற்றர் அளவு 11,261,099 ஆனதுடன் 2011 னுல் அது 11,624,905 ஆகும்.அது சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் 3% அதிகரிப்பைக் காட்டுகிறது. அதற்காக பயன்படுத்திய எரிபொருளின் லீற்றர் அளவு 2010 வருடத்தில் 29,374,946 ம் 2011 ம் ஆண்டில் 30,479,035 க காட்ட முடியும். அதன்படி ஒரு கிலோ மீற்றர் செயற்படுத்துவதற்காக செலவான டீசல் லீற்றர் அளவு 26 க காட்ட முடியும்.

5.2 சாதாரன தினசரி இயக்கவலு வழங்கள்

டீசல் நீர் மின் புகையிரத இயந்திரங்கள்

| இனம் / தொகுதி | பராமரிப்பிலுள்ள எண்ணிக்கை. | சேவைக்காக தேவைப் படும் எண்ணிக்கை | சேவைக்காக கிடைத்த எண்ணி. |
|---|---|---|---|
| W2 | 3 | 1 | 1 |
| W4 | 1 | 1 | 0 |
| W3 | 10 | 8 | 8 |
| Y | 28 | 21 | 20 |
| S5 | 3 | 2 | 2 |

டீசல் மின் இயந்திரம்

| இனம்/ தொகுதி | பராமரிப்பிலுள்ள எண். | சேவைக்காக தேவைப்படும எண். | சேவைக்காக கிடைத்த எண். |
|---|---|---|---|
| M2 | 13 | 10 | 9 |
| M4 | 14 | 10 | 10 |
| M5B | 4 | 3 | 3 |
| M5C | 7 | 5 | 6 |
| M6 | 14 | 11 | 11 |
| M7 | 15 | 10 | 8 |
| M8 | 8 | 6 | 5 |
| M8A | 2 | 1 | 1 |
| M9 | 9 | 6 | 4 |

இந்த வருடத்தினுல் சேவையை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான சாதாரன தினசரி டீசல் இயந்திரங்களின் எண்ணிக்கை 60 ஆனதுடன் அதை 57 என்ற மட்டத்தில் நடைமுறைப்படுத்த முடிந்தது. அதேபோன்று வலுவேக தொடரூர்திகள் 53 சாதாரன சேவை தேவைகளை பூர்த்திசெய் வதற்காக இவ்வருடத்தினுல் தேவைப்பட்டதுடன் அதை 49 என்ற மட்டத்தில் வைத்துக்கொள்ள முடிந்தது.

5.3 எரிபொருள் பாவனை

இயக்கவலு வழங்குதலுக்காக (இயந்திரம் மற்றும் வலுவேக தொடரூர்திகள்) பயன்படுத்தப்பட்ட எரிபொருள்

| இல | எரிபொருள் வகை | 2010 (லீற்றர்) | 2011 (லீற்றர்) |
|---|---|---|---|
| 01 | பெற்றோல் | | |
| 02 | டீசல் | 29,374,946 | 30,479,035 |
| 03 | ஊராய்வு எண்ணெய் | | |
| 04 | ஏனையவை | | |
| 05 | எரிபொருளுக்கான செலவு ரூ.மி. 2144 | 2,144 | 2,560 |
| 06 | என்ஜின் கி.மீ. | 11,261,099 | 11,624,905 |

2010 ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2011 ம் ஆண்டில் முழு எரிபொருள் பாவனை அதிகரித் துள்ளதுடன் அதற்காக நடைபெற்ற இயந்திர கி.மீ. அளவு சென்ற வருடத்தை விட 3.5 % ஆல் அதிகரித்துள்ளமை முக்கிய காரணமாகும். இதற்கு ஒத்ததாக எரிபொருளுக்கான செலவு சென்ற

வருடத்தை விட 19 % ஆல் அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட புதிய வலுவேக தொடரூர்திகளை (S11) சேவையில் இணைத்தமை, செயற்படுத்தப்பட்ட புகையிரத எண்ணிக்கை மற்றும் பயண எண்ணிக்கை அதிகரித்தமை போன்ற காரணிகள் இதில் தாக்கம் செலுத்தியுள்ளது.

2011 ம் ஆண்டில் இயந்திரம் கோளாறுகள் 660 குறிக்கப்பட்டுள்ளதுடன் அது சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் 11 % அதிகரிப்பாகும்.

கீழ் அட்டவணையில் காட்டப்படுவது இயந்திர கோளாறுகள் பற்றிய சுருக்கமாகும்.

| வருடம் | இயந்திர கோளாறு எண்ணிக்கை |
|---|---|
| 2009 | 583 |
| 2010 | 593 |
| 2011 | 660 |

மேலுள்ள தகவல்களை நோக்குகையில் புகையிரத இயந்திரங்களில் செயற்றிறன்பற்றி திருப்தியடைய முடியாத நிலையிலுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணியாக உள்ளது தற்போது புகையிர திணைக்களத்திடம் உள்ள 40 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த இயந்திரங்கள் திருத்தங்களின் பின் சேவையில் ஈடுபடுத்துதல்.

எப்படியிருந்தும் இயக்கவலு உப திணைக்களம் 2011 ம் ஆண்டினுல் பாரிய வசதியீனங்களுக்கு மத்தியலும் முறைப்படி இந்த இயந்திரங்களை சேவையில் ஈடுபடுத்த முக்கிய பங்களிப்பை வழங்கி உள்ளது.

## 06. நிரந்தர பாதை கட்டமைப்பு மற்றும் கட்டிடங்கள்

புகையிரத செயற்பாட்டை செயல் திறனுள்ளதாக்க நிரந்தர புகையிரத பாதை வலைஅமைப்பினுல் மற்றும் பராமரிப்பு பணிகள் இவ்வாண்டினுல் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதற்காக ரூ.மி. 2302 அளவில் செலவாகியுள்ளது. இதன் கீழ் நிரந்தர பாதைக்குச் சில்பர் கட்டை இடல் தண்டவாளமிடல், சாலைக்கல் பரவுதல் மற்றும் கட்டிடங்கள், மற்றும் இளைப்பாறும் அறைகள், அலுவலக கட்டிடங்கள், களஞ்சிய அறைகள், புதிய தொழிற்சாலைக் கட்டிடங்கள், தொழிலாளர் விடுதிகள் மற்றும் சுற்றுலாவிடுதி பராமரிப்புப் பணிகள் ஆகியவை உள்ளடங்கும்.

பிரதான பாதை, கிழக்குப் பாதை, வடக்குப் பாதை, புத்தளம் பாதை, களனி வெளி பாதை ஆகிய புகையிரதப் பாதைகளில் நவீனமயப்படுத்தல் தொடர்பாக நடைபெற்றதுடன் அதன் காரணமாக கீழ் குறிப்பிடப்படும் விதமாக வேக எல்லைகளை அகற்றிக் கொள்ள முடிந்தது.

- கொழும்பிலிருந்து றம்புக்கணை வரை வேக எல்லைகள் 12 ஐ அகற்றியமை
- களனிவெளிப் பாதையில் கொழும்பிலிருந்து பாதுக்கை வரை வேக எல்லையை அகற்றியமை.

**பாதை பராமரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்**

| பயன்படுத்தப்பட்ட பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|
| தண்டவாளங்கள் | 3,017 |
| மர சில்பர் கட்டை | 75,577 |
| கொன்கிறீட் சில்பர் கட்டை | 52,669 |
| உருக்கு சில்பர் கட்டை | 13,170 |
| சாலைக்கல் (கியூப்) | 15,043 |

புகையிரதப் பாதைகளின் பராமரிப்புப் பணிகள் தொடராக இடம்பெறுவதுடன் 2011 ம் ஆண்டு இறுதியளவில் மர சில்பர் 75557 உம் கொங்கிரீற், உருக்கு சில்பர் கட்டைகள் முறையே 52659 உம் 13170 உம் பாதையில் பரப்பப்பட்டன. வருட இறுதியில் சரலைக்கல் 15043 கியுப் அளவில் பாதை பராமரிப்புக்காக பயன் படுத்தப்பட்டது.

